பதிவு அஞ்சல் மூலம்

105 53

## நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

க.கோபால கிருஷ்ணன், B.E.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்,
எண்.43/397A, இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி – II,
திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி - 044-29595440.
email-tvlrregion@gmail.com.

பெறுநர்

ஆணையர் /உறுப்பினர் செயலர்,
திருவள்ளூர் நகராட்சி /உள்ளூர்திட்டக்குழுமம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**ந.க.எண்.1303/2020/ திருவள்ளூர்-2** **நாள்.28.04.2021.**

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலம் - திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் வட்டம் - திருவள்ளூர் நகராட்சி / உள்ளூர் திட்டப்பகுதி – பெரியகுப்பம் கிராமம் - நில அளவை எண்கள்.682/1, 2Pt (வார்டு எண்.D, பிளாக் எண்.4, நகரளவு எண்கள்.143/1-23)-ல் 4094.0 ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. ஆணையர், திருவள்ளூர் நகராட்சி அவர்களின் கடிதம், ந.க.எண். 744/2020/எப்1, நாள்.06.08.2020. மற்றும் மனுதாரர் இணையதள விண்ணப்பம் எண்.202005401014273, நாள்.10.03.2020.
2. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.05.11.2020. (சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
4. ஆணையர், திருவள்ளூர் நகராட்சி அவர்களின் அவர்களின் கடித ந.க.எண். 744/2020/எப்1, நாள்.24.03.2021. தானப்பத்திர எண்கள்.2232/2021, நாள்.17.02.2021 மற்றும் 4329/2021, நாள்.22.03.2021.
5. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
7. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3) நாள்.23.09.2020.
8. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1) நாள்.09.12.2020
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017,
10. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.

*****

உத்தரவு :

பார்வை 1-ல் சுட்டிய **நகராட்சி ஆணையர்** கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் நகராட்சி / உள்ளூர் திட்டப்பகுதி, பெரியகுப்பம் கிராமம், நில அளவை எண்கள்.682/1, 2Pt (வார்டு எண்.D, பிளாக் எண்.4, நகரளவு எண்கள்.143/1-23)-ல் 4094.0 ச.மீ பரப்பளவு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதம் நாள்.**05.11.2020**-ன் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டிய **நகராட்சி ஆணையர்** அவர்களின் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக **தானப்பத்திர எண்கள்.2232/2021 நாள்.17.02.2021** மற்றும் **4329/2021 நாள்.22.03.2021**-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டதை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.ந.ஊ.உ. இ.(திருவள்ளூர்)எண்.75/2021** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும், **நகராட்சியால்** இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. **நகராட்சியின்** ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. பார்வை 9 மற்றும் 10-ல் கண்ட அரசு கடித மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை **நகராட்சியின்** பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் **நகராட்சியின்** பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்
2. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

107 54

3. பார்வை 5 மற்றும் 6-ல் காணும் அரசாணைகளின்படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.7,000/-(ரூபாய் ஏழாயிரம் மட்டும்), OSR கட்டணம் ரூ.17,75,000/-(ரூபாய். பதினேழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) பரிசீலனை கட்டணம் ரூ.6,400/-(ரூபாய் ஆறாயிரத்து நானூறு மட்டும்) மற்றும் மேலும் கொடிநாள் நிதியாக ரூ.1,500/- "**Armed Force Flag Day Fund**" க்கு பெறப்பட்டுள்ளது

4. பார்வை 8-ல் கண்ட அரசாணையின்படி "While approving the layout in the Greater Chennai Corporation, the procedure of collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants shall be continued. The same procedure shall also be continued in the other Urban Local Bodies within Commissionerate of Municipal Administration. After Collecting the necessary fees the final layout sketch, permit of planning Authority along with approval of Local Body shall be issued to the applicants directly".

**இணைப்பு:**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
( 4 தொகுப்பு)

உதவி இயக்குநர், 28/4/2021
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**நகல்:**

1. மனுதாரர் ( பத்தி ஒன்று மட்டும்)
   திரு.V.N.ஹரிநாத் மற்றும் நால்வர்
   எண்.807/432, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
   அரும்பாக்கம்,
   சென்னை – 600 106.

28.4.2021

2. இருப்பு கோப்பு ( வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)
3. Tamil Nadu Real Estate Regulatory Authority,
   No.1A, 1st Floor, CMDA Tower II,
   Gandhi - Irwin Bridge Road,
   Egmore, Chennai- 600 008.

2

169 55

திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:திரு.ப.சந்தானம்,பி,காம்.,

ந.க.எண்.744/2020/எப்1.

நாள். 04.08.2021.

பொருள் : மனைப்பிரிவு திருவள்ளூர் மாவட்டம் / திருவள்ளூர் நகராட்சி – பெரியகுப்பம் கிராமம் நில அளவை எண்.682/1, 2Pt, (வார்டு எண்.D, பிளாக் எண்.4, நகரளவை எண். 143/1–23)–ல் 4094.0 ச.மீ பரப்பளவு இடத்தில் – குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. மனுதாரர் திரு.V.N.ஹரிநாத் மற்றும் நால்வர் அவர்களின் 20.03.2020–ம் தேதிய விண்ணப்பம்.

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1303/2020/ திருவள்ளூர்–2, நாள்.05.11.2020.

3. உள்ளூர் திட்ட குழும தீர்மான எண். 253 நாள்.23.02.2021 மற்றும் தானபத்திர எண்.2237 நாள்.17.02.2021 மற்றும் 4329 நாள்.22.03.2021.

4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1303/2020/ திருவள்ளூர்–2, நாள்.28.04.2021.

@@@@@

உத்திரவு:

பார்வை 4–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அவர்களின் தொழில்நுட்ப உத்திரவில், இந்நகராட்சிக்குட்பட்ட பெரியகுப்பம் கிராமம் நில அளவை எண்.682/1, 2Pt, (வார்டு எண்.D, பிளாக் எண்.4, நகரளவை எண். 143/1–23)–ல் 4094.0ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.75/2021 என எண்ணிடப்பட்டு சில நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை2–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அவர்களின் சாலை அமைப்பு வரைபடம் மற்றும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி பொறியாளரின் 25.01.2021–ந் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளபடியும், மனுதாரர் அடிப்படைவசதிகளுக்கான கட்டணங்களையும் செலுத்தியுள்ளார். மேலும் மனுதாரர் மனைப்பிரிவில் அமையும் 569.35 சதுர மீட்டர் இடத்தினை சாலைக்காகவும், 16.875 சதுரமீட்டர் இடத்தினை சாலை முடக்குகளுக்காகவும், நகராட்சிக்குண்டான பகுதி 17.75 சதுரமீட்டம் மற்றும், மின்வாரியத்திற்குண்டான பகுதி 17.75 சதுரமீட்டர் இடத்தினை இந்நகராட்சியின்

ஆணையர் பெயருக்கு தானமாக திருவள்ளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.4329 நாள்.22.03.2021–ன் மூலம் பத்திர பதிவு செய்து அசல் பத்திரத்தினை இந்நகராட்சியில் சமர்ப்பித்ததை தொடர்ந்து. பார்வை 3–ல் கண்டுள்ள உள்ளூர் திட்டக் குழும தீர்மான எண்.253 நாள்.23.02.2021–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் இந்நகராட்சியில் செலுத்தப்பட வேண்டிய மனைப்பிரிவுக்கு உண்டான உரிய கட்டணங்களையும் செலுத்தியுள்ளார்.

எனவே மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அவர்களின் தொழில்நுட்ப உத்திரவில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள இதன் மூலம் உத்திரவு அளிக்கப்படுகிறது. மேலும் தவறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இவ்வுத்திரவு பெறப்பட்டு இருப்பின் நிபந்தனைஇன்றி மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆணையர் 4/8/21
திருவள்ளூார் நகராட்சி
க.ய
4/8/21 04/8/21

<u>இணைப்பு</u>:

1. வரைபடம்
2. நிபந்தனைகள்.

<u>பெறுநர்.</u>

திரு.N.ஹரிநாத் மற்றும் 4 நபர்கள்,
807/432, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
அரும்பாக்கம், சென்னை– 106.

<u>நகல்</u>:

1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்.
2. சார்பதிவாளர் அவர்கள் திருவள்ளூர்.
3. நகராட்சி பொறியாளர் திருவள்ளூர் நகராட்சி.
4. வட்டாச்சியர், வட்டாச்சியர் அலுவலகம், திருவள்ளூர்.